




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.4.2025) காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், சேக்கிழார் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலைஞர் கைவினைத் திட்டத்தை தொடங்கி வைத்து, 8951 பயனாளிகளுக்கு 34 கோடி ரூபாய் மானியத்துடன் 170 கோடி ரூபாய் கடன் ஒப்புதல் ஆணைகளை வழங்கினார். இந்த விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வப்பெருந்தகை, எஸ்.எஸ்.பாலாஜி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், எம்.பாபு, இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலாளர் கி.வீர ராகவ ராவ், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல. நிர்மல்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வாட்ஸ் அப்பில் வலம் வரும் செய்தி!




# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

சொன்னது போல, அப்பா தொழிலை மகனுக்குக் கற்றுத் தர குலக்கல்வி முறையை இராஜாஜி ஆட்சிக் காலத்தில் உருவாக்கினார்கள். இதற்கு எதிராக தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் போராடினார்கள். பெருந்தலைவர் காமராசர் அவர்கள்தான் அந்த முறையை திரும்பப் பெற்றார். இத்தனை ஆண்டுகள் ஆகியும், சிலருடைய மனதிலிருந்து அந்த பழமைவாத எண்ணம் இன்னும் போகவில்லை என்பதன் அடையாளம்தான் விஸ்வகர்மா திட்டம்.

**திராவிட இயக்கத்தின் வெற்றி!**

அதை எதிர்த்து நம்முடைய திராவிட மாடல் அரசு சமூகநீதித் திட்டமாக, கலைஞர் கைவினைத் திட்டத்தை உருவாக்கி இருக்கிறது. இதுதான் காலத்தின் வெற்றி. இதுதான் திராவிட இயக்கத்தின் வெற்றி.

போராடும் இடத்தில் இருந்து, நாம் மாற்றுத் திட்டத்தை உருவாக்குகின்ற வளர்ச்சியை அடைந்திருக்கிறோம். இது ஒரு கட்சியின் ஆட்சியல்ல, ஒரு கொள்கையின் ஆட்சி என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். அந்த அடிப்படையில்தான் இது போன்ற திட்டங்களைத் தீட்டுகிறோம்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன் துறையை சிறப்பாக வளர்த்தெடுக்கிறார்!**

தமிழ்நாடு இன்றைக்கு மாபெரும் வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால், பெரிய நிறுவனங்களால் மட்டுமே இந்த வளர்ச்சி வந்துவிடவில்லை. சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களாலும்தான் இந்த வளர்ச்சியை நாம் சாத்தியமாக்கி இருக்கிறோம். இந்தத் துறைக்கு பொறுப்பேற்றுள்ள நம்முடைய அருமைச் சகோதரர் தா.மோ. அன்பரசன் அவர்கள் இந்தத் துறையை சிறப்பாக வளர்த்தெடுத்துக் கொண்டு வருகிறார்.

கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு MSME நிறுவனங்களை அவர் வளர்த்தெடுத்திருக்கிறார். அவை பெருந்தொழில்களுக்குத் துணையாக இருந்து நாட்டின் 'இன்க்ளூசிவ்' மற்றும் 'ஆல்ரவுண்ட்' சமூக வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிக்கிறது. உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதால், மக்கள் வேலை தேடி தொலைதூரங்களுக்கு இடம் பெயர்வது பெருமளவு தடுக்கப்படுகிறது.

**தமிழ்நாடு இந்தியாவிலேயே 3-ஆவது இடம்!**

MSME தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கையில், தமிழ்நாடு இந்தியாவிலேயே 3-ஆவது இடத்தை வகித்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில், சுமார் 33 இலட்சம் MSME தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவின் மொத்த எண்ணிக்கையில் இது எவ்வளவு தெரியுமா? 9.4 விழுக்காடு.

அனைத்து மாவட்டங்களிலும், தொழில் முயற்சிகளை பரவலாக நாம் தொடங்கி வருகிறோம். அந்த வகையில்தான் கலைஞர் கைவினைத் திட்டமும் முன்னோடித் திட்டமாகத் தொடங்கப்பட்டிருக்கிறது.

கைவினைக் கலைஞர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாத்து அவர்கள் வளர்ச்சிக்காக, 'தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் மேம்பாட்டு நிறுவனம் - 'பூம்புகார்' நிறுவனத்தை முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் 1973ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார். 2025ல் அவர் பெயரில் கலைஞர் கைவினைத் திட்டத்தை, உங்களில் ஒருவனாக இருக்கக்கூடிய நான் இன்றைக்கு தொடங்கி வைக்கிறேன்.

நேற்று திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் நடந்த அரசு விழாவில் பங்கேற்று, 60 ஆயிரம் பேருக்கு மேல் பட்டாக்கள் வழங்கினேன். சில நாட்களுக்கு முன்பு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்ட சட்டத்தின் மூலமாக, சுமார் 15 ஆயிரம் மாற்றுத் திறனாளிகள் உள்ளாட்சி அமைப்புகளில், தேர்தலே இல்லாமல் உறுப்பினர்களாகப் போகிறார்கள். இது போன்ற திட்டங்கள் மூலமாகத்தான் ஒரு முதலமைச்சராக நான் மனநிறைவை அடைந்து கொண்டிருக்கிறேன்.

கலைஞர் கைவினைத் திட்டத்தில் சேர்ந்து, நிதியுதவி பெற்று தொழில் தொடங்கும் பயனாளிகள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

ஏதோ தொழில் தொடங்கினோம் - வாழ்க்கையை நடத்தினோம் என்று இல்லாமல், நிறையப் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்ற அளவுக்கு நீங்கள் உயர வேண்டும் என்று மன நிறைவோடு உங்களை நான் வாழ்த்துகிறேன்!

துறை நிகழ்ச்சிக்கு வந்துவிட்டு கோரிக்கைகளை நிறைவேற்றாமல் சென்றால், நீங்கள் விடமாட்டீர்கள் - அதுவும் அன்பரசன் என்னை சும்மாவே விடமாட்டார்.

அரசு சார்பில், நாங்கள் வழங்குவது இந்த சிறு உதவி மட்டும்தான். அது மூலமாக உரம்பெற்று - உயர்ந்து - வளர்ந்து - நீங்களும் வாழ்ந்து - மற்றவர்களையும் வாழ வைக்க வேண்டிய கடமை உங்கள் கையில்தான் இருக்கிறது.

"தெய்வத்தான் ஆகாது எனினும்; முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்" என்கிறார் வள்ளுவர். 'முயற்சி திருவினை ஆக்கும்' என்பதை அனைவரும் உணர்ந்து உழைப்பைச் செலுத்துங்கள்!

உங்கள் தொழிலில் புதிய டெக்னாலஜியைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தொழிலை விரிவு செய்யுங்கள்! உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்கள் பகுதியையும் வளப்படுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## ஐந்து முக்கிய அறிவிப்புகள்!

**அந்த வகையில், தொழில்களை ஊக்குவிக்கவும், தொழில் முனைவோர்களுக்கு உதவுகின்ற வகையிலும், இந்த விழாவின் மூலமாக ஐந்து அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்...**

### முதல் அறிவிப்பு

**அறிவுசார் சொத்துரிமையான 'புவிசார் குறியீடு' பெறுவதற்காக வழங்கப்பட்டு வரும் மானியம் 25 ஆயிரம் ரூபாயில் இருந்து ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.**

### இரண்டாவது அறிவிப்பு

**அம்பத்தூர் தொழிற்பேட்டையில் செயல்படும் வாகன மற்றும் பொறியியல் உதிரி பாகங்கள் தயாரிக்கின்ற தொழில் நிறுவனங்களுக்கு தேவையான அளவியல் மற்றும் உலோகவியல் ஆய்வகங்கள் ஐந்து கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

### மூன்றாவது அறிவிப்பு

**தொழில் நிறுவனங்கள் மிகுதியாக இருக்கின்ற காஞ்சிபுரம் - பழந்தண்டலத்தில் சாலை கட்டமைப்பு மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க ஐந்து கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.**

### நான்காவது அறிவிப்பு

**காக்களூர் உற்பத்தியாளர்கள் தொழிற்பேட்டையில், தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டுக்கான பயிற்சி மையம் மற்றும் இயந்திரத் தளவாடங்களுடன் கூடிய பொது வசதி மையம் மூன்று கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

### ஐந்தாவது அறிவிப்பு

**குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், உள்நாட்டில் வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகளில் பங்கேற்க வழங்கப்படக்கூடிய காட்சிக்கூடக் கட்டணத்துக்கான நிதியுதவி, ஒரு இலட்சம் ரூபாயில் இருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

---

சென்னை கடற்கரை முதல் செங்கல்பட்டு வரை

# குளிர்சாதன மின்சார ரயில்கள் இயக்கம்!

## பயணிகள் வரவேற்பு!

சென்னை, ஏப். 20 –

சென்னை கடற்கரை முதல் செங்கல்பட்டு வரை, குளிர்சாதன மின்சார ரயில்களின் சேவை நேற்று தொடங்கியது. தமிழ்நாட்டின் முதல் குளிர்சாதன புறநகர் ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளதற்கு பயணிகள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று ரயில்வே துறைக்கு பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்..

இந்தியாவில் மும்பை, கொல்கத்தாவிற்கு அடுத்தபடியாக அதிக மக்கள் பயன்படுத்தும் புறநகர் ரயில் சேவையாக சென்னை புறநகர் ரயில் சேவை இருக்கிறது. நாள்தோறும் 25 லட்சம் மக்கள் இந்த புறநகர் ரயில்சேவையை பயன்படுத்துகின்றனர். நாளொன்றுக்கு ஆயிரம் ரயில் ரயில் சேவைகள் இயக்கப்படும் நிலையில், குளிர்சாதன ரயில் சேவை தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், சென்னை கடற்கரை முதல் செங்கல்பட்டு வரை குளிர்சாதன மின்சார ரயில்களின் சேவை நேற்று காலை 7 மணிக்கு தொடங்கியது. தமிழ்நாட்டின் முதல் குளிர்சாதன புறநகர் ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளதற்கு பயணிகள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

---

கடலூர் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர்

# து.தங்கராசு மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.20-

கடலூர் கிழக்கு மாவட்ட அவைத் தலைவரும் முன்னாள் நகர் மன்றத் தலைவரும், முன்னாள் நகரக் கழகச் செயலாளருமான து.தங்கராசு அவர்கள் நேற்று (19.4.2025) காலை 7.00 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

---




# கண்ணீர் அஞ்சலி

கடலூர் மாவட்டம், கடலூர் திருப்பாதிரிப்புலியூர், அக்கில் நாயுடு தெருவில் வசித்து வந்த

**தி.மு.க. மாவட்ட அவைத் தலைவர்,**
**முன்னாள் நகர மன்ற தலைவர்,**
**முன்னாள் நகர செயலாளர்**

திரு: **து.தங்கராசு** அவர்கள்

**19.04.2025 சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதி ஊர்வலம் 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு கெடிலம் நதிக்கரையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

கண்ணீருடன்...

மகன்கள்:

**த.ரமேஷ்**
மாநகர பிரதிநிதி
கடலூர் மாநகர தி.மு.க.
மு.தலைவர்
கடலூர் கோஸ்டல் சிட்டி
ரோட்டரி சங்கம்

**த.செல்வகுமார்**
தி.மு.க வார்டு பிரதிநிதி
24 வது வார்டு

வருத்தத்துடன் ...

**குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்**